கிறார்கள். நாம் இன்னும் சில விவரங்கள் கேட்டு இருக்கிறோம். அவர்கள் தருகின்ற தொகை போதாது, இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். கடிதப்போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. Exchange of letters are going on. ஆகவே அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கப் படும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு அங்கே மருத்துவக் கல்லூரிகளிலே இடம் அளிப்பது மறுக்கப்படுகிறது. அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். ஆகவே, இலங்கை தமிழ் மாணவர்களுக்கு என்று சில இடங்களை நம்முடைய மருத்துவக் கல்லூரிகளில் ஒதுக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 22 இடங்களிலே கூட இலங்கை மாணவர்கள் கூட, தமிழ் ஆரிஜின் இருக்கக்கூடியவர்கள் அதில் சேர்க்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, சிலோன் ரீப்பாட்ரியேட்ஸ், நம்முடைய தமிழகத்தில் உள்ள சிலோன் ரீப்பாட்ரியேட்ஸ் ஆக இருக்கக்கூடியவர்களுக்கு தனியாக 5 இடங்கள் கொடுக்கப்படுகின்றன.

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, இந்த வெளி நாட்டு மாணவர்கள் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படு கிறார்கள்? ஆண்டுதோறும் வெளிநாட்டு மாணவர்கள் எண்ணிக்கை வேறுபடுகிறது. ஆகவே வெளிநாட்டு மாணவர்கள் எத்தனை சதவீதம் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படு கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, 1968-ல் 9 இடங்கள் கொடுக்கப்பட்டன; 1972-ல் 12 இடங்கள்; 1980-ல் 20 இடங்கள்; 1981-ல் பிஜி ஐலன்ட்ஸை சேர்ந்தவர்களுக்கு 22 இடங்கள் கொடுத்திருக்கிறோம்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தூங்கும் வசதி கொண்ட பேருந்துகளை விடும் திட்டம்

*வினா. எண் 544—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா —

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தூங்கும் வசதி கொண்ட பேருந்து (SLEEPER COACH) விடும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஆம்.

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, இப்படி தூங்கும் வசதி கொண்ட எத்தனை பேருந்துகள் திருவள்ளுவா போக்குவரத்துக் கழகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு பேருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. இன்னொன்று தயாராகிக் கொண்டிருக்கிறது.

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, அந்தப் பேருந்துகளை எந்த எந்த வழித்தடங்களில் விடுவதாக அரசு உத்தேசித்துள்ளது? அந்தப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தன்னுடைய யோசனைப்படி தயாரித்துள்ளதா? அல்லது வேறு மாநிலங்களில் இம்மாதிரியாக இருந்து, அதைப்பார்த்து தயார் செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இன்னும் எந்த எந்த வழித்தடங்களில் விடுவது என்று முடிவு செய்யப்படவில்லை. இது நம்முடைய சொந்த யோசனையில் உருவானது.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, தூங்கும் வசதி கொண்ட பேருந்துகளை இரயில் வசதி இல்லாத குமரி மாவட்டத்தில் விட்டு அந்த மக்களின் தேவையை நிறைவுசெய்த பெருமையை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இப்படிக் கேட்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆகவே இந்தக் கேள்விக்குப் பதில் தேவையில்லை.

அம்பத்தூரில் பேருந்து நிலையம் அமைத்தல்

*வினா எண். 545—திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் வரை செல்லும் பேருந்துகள் அம்பத்தூரில் பேருந்து நிலைய வசதி இல்லாமல் சாலையிலேயே நிறுத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தர பேருந்து நிலையம் அங்கு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?